சுருக்கம்

அறிவிப்புகள் – 2021 – 2022 – ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – சிறுபான்மையினர் நலன் – மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம் / கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் துவங்கிட அனுமதி மற்றும் அரசின் விதைத் தொகை நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.82

நாள் 01.12.2021,
பிலவ – கார்த்திகை 15,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.14, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 23.04.2007.
2. அரசாணை (நிலை) எண்.37, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 04.04.2008.
3. அரசாணை (நிலை) எண்.109, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாமையினர் நல (ட்டி1)த் துறை, நாள் 08.10.2012.
4. அரசாணை (நிலை) எண்.70, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபாமையினர் நல (சிநஆபி1)த் துறை, நாள் 01.11.2018.
5. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.அ4/3003/2021, நாள் 27.09.2021 மற்றும் 25.10.2021.

......

ஆணை:

2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் "முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மாவட்டத்திற்கு

ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக தேவையின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக முஸ்லிம் / கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் துவங்கப்படும்" என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு பெறப்பட்ட மேலே, ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவில், தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் மாவட்டத்தின் பெயரை முதலாவதாகக் கொண்டு "முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் –2" என்ற 3 சங்கங்கள் கூடுதலாக துவங்கிடவும் மற்றும் கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் மாவட்டத்தின் பெயரை முதலாவதாகக் கொண்டு "கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்–2" என்ற 3 சங்கங்கள் கூடுதலாக துவங்க அனுமதியும் மற்றும் மேற்படி சங்கங்களுக்கு விதைத் தொகையாக சங்கம் ஒன்றிற்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் 6 சங்கங்களுக்கு ரூ.6.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், ஏற்கெனவே, அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கத்தின் செயற்குழுவில் உள்ள வரிசை எண் 1 முதல் 3 வரை உள்ள குழு உறுப்பினர்களை தவிர, மற்ற வரிசை எண். 4,5,6,7 மற்றும் 8 –இல் உள்ள குழு உறுப்பினர்களை புதியதாக நியமித்து செயல்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே செயல்பட்டு வரும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் நெறிமுறைகளே இச்சங்கத்திற்கும் பொருந்தும் எனவும் சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் மாவட்டத்தின் பெயரை முதலாவதாகக் கொண்டு "முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் –2" என்ற 3 சங்கங்கள் கூடுதலாக துவங்கிடவும் மற்றும் கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் மாவட்டத்தின் பெயரை முதலாவதாகக் கொண்டு "கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்–2" என்ற 3 சங்கங்கள் கூடுதலாக துவங்கிட அனுமதி அளித்தும் மற்றும் மேற்படி கூடுதலாக துவங்கப்படவுள்ள சங்கங்களுக்கு விதைத் தொகையாக சங்கம் ஒன்றிற்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் 6 சங்கங்களுக்கு ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) வழங்க நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், ஏற்கெனவே அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கத்தின் செயற்குழுவில், வரிசை எண் 1 முதல் 3 வரை உள்ள குழு உறுப்பினர்களைத் தவிர, மற்ற வரிசை எண்ணில் குறிப்பிடப்பட்டுள்ள குழு உறுப்பினர்களை புதியதாக நியமித்து செயல்படுத்தலாம் என்றும், ஏற்கெனவே செயல்பட்டு வரும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் நெறிமுறைகளே கூடுதலாக துவங்கப்படவுள்ள சங்கத்திற்கும் பொருந்தும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் - 200 - ஏனைய திட்டப் பணிகள் - மாநிலச் செலவினங்கள் -DF - முஸ்லிம் மகளிர் சங்கங்கள் - 309 - உதவித் தொகை - 01 - நடப்புச் செலவுக்கான உதவித் தொகை".
(த.தொ.கு 2235 60 200 DF 30901)" ரூ.3,00,000/-

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் - 200 - ஏனைய திட்டப் பணிகள் - மாநிலச் செலவினங்கள் - MA - கிறித்துவ மகளிர் சங்கத்திற்கு நிதியுதவி - 309 - உதவித் தொகை - 01 - நடப்புச் செலவுக்கான உதவித் தொகை".
(த.தொ.கு 2235 60 200 MA 30901)" ரூ.3,00,000/-

5. மேலே, பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவுத் தொகையினை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.6,00,000/- 2021-2022 - ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று, செலவினத்தை மேற்கொள்ள சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2021-2022-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (பி.மி.பி(ம)சிந/வ.செ.பொது-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலும், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் மேற்படி கூடுதலாக துவங்கப்படவுள்ள சங்கங்களை பதிவு செய்து செயல்பட செய்யுமாறும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலும், ஏற்கெனவே அனைத்து மாவட்டங்களிலும் தற்போது செயல்பட்டு வரும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் போன்றே, தற்போது மேற்படி மாவட்டங்களில் கூடுதலாக துவங்கப்படவுள்ள முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் மூலம் வசூல் செய்யப்படும் நன்கொடைத் தொகைக்கு அரசின் இணை மானியத் தொகையினை இருமடங்கு (1:2) என்ற விகிதத்திலும், நன்கொடைத் தொகைக்கு அரசின் இணை மானியத் தொகை இருபருவங்களுக்கும் சேர்த்து அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரையும் வழங்கப்படும். மேலும், மேற்படி சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப அரசினால் அவ்வப்போது அளிக்கப்படும் இணைத்

தொகையினைப் (Matching Grant) பெற்று வழங்கும் அதிகாரம் சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அளிக்கப்படுகிறது.

8. இவ்வரசாணை, நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.52278/நிதி (பி.மி.பி.(ம)சிந) துறை/2021, நாள் 29.11.2021-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1007 (ஆயிரத்து ஏழு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை-5.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை,
சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை -I, II), சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
மேலண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
சென்னை-5.
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர். (தேனி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், கரூர் மற்றும் மதுரை மாவட்டம்)

நகல்:
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி(பி,மிபி,சிந/வ.செ.பொ-I,II/ வ.வ-I) த் துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்/சிநஆபி)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

7/12/21
**பிரிவு அலுவலர்**
07/12/21